**வெலிமடை பிரதேச சபை**
**பதுளை மாவட்டம்**

---

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2014 மார்ச் 31 ஆந் திகதியன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2013 மார்ச் 28 ஆந் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 செப்டம்பர் 16 ஆந் திகதியன்று சபையின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 கணக்காய்வு அபிப்பிராயம்

எனது அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் நிதிசார் கூற்றுக்களில் ஏற்பட்ட தகவல்களைத் தவிர, நிதிசார் கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு அமைய தயாரிக்கப்பட்டிருந்தன. என்றும், 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான வெலிமடை பிரதேச சபையின் நடவடிக்கைகளது, நிலைமை மற்றும் முடிவுற்ற அவ்வாண்டிற்கான அதன் செயற்பாட்டினது நிதிசார் விளைவுகள் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றினது உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலையைக் காட்டுகின்றன. என்பதும் எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்ளூராட்சி சேவைகள் ஓய்வூதிய நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய ஓய்வூதிய உதவு தொகையான ரூபா 1,900,283 கடன்கொடுத்தோரின் கீழ் ரூபா 2,582,643 ஆகக் காட்டப்பட்டமையால் நிதிசார் கூற்றுக்களில் பொறுப்புகள் ரூபா 682,360 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு விலைப்பட்டியலைச் சமர்ப்பிக்காது அல்லது வேலை முடிவுறாதிருந்த வேலைகள் மற்றும் கொள்வனவுகளுக்குக் கடன்கொடுத்தோரின் கீழ் நிதியேற்பாடு செய்யப்பட்டதால் ஆண்டிற்கான செலவினமும் டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன்கொடுத்தோரும் நிதிசார் கூற்றுக்களில் ரூபா 209,000 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

(இ) மீளாய்வாண்டிற்குரிய சம்பள மீளளிப்பாகிய ரூபா 86,762 வருமான, செலவினக் கணக்கில் வாடகை வருவாயாகக் கணக்கிலிடப்பட்டமையால் வருவாய் உதவி ரூபா 86,762 குறைத்தும் வாடகை வருவாய் அதேயளவு தொயைால் அதிகரித்தும் நிதிசார் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஈ) மீளாய்வாண்டிற்குரிய சம்பள மீளளிப்பாகிய ரூபா 401,841 மூலதன உதவியின் கீழ் கணக்கிலிடப்பட்டமையால் வருமான, செலவினக் கணக்கில் வருவாய் உதவி ரூபா 401,841 குறைத்தும் மூலதன உதவி அதேயளவு தொகையால் அதிகரித்தும் நிதிசார் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(உ) மீளாய்வாண்டிற்குரிய வாடகை வருவாயாகிய ரூபா 859,365 சேவைகளுக்கான கட்டண வருவாயின் கீழ் கணக்கிலிடப்பட்டமையால் வருமான செலவினக் கணக்கில் வாடகை வருவாய் ரூபா 859,365 குறைத்தும் சேவைகளுக்கான கட்டணம் அதேயளவு தொகையால் அதிகரித்தும் நிதிசார் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

### 1.3.2 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதி ரூபா 27,603,372 ஆகவும் கொடுப்பனவு செய்யவேண்டிய கணக்கு மீதி ரூபா 52,288,987 ஆகவுமிருந்தன.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றின்மை

தேவையான தகவல்களைக் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்காமையால் ரூபா 22,484,057 கூட்டுத்தொகையுடைய கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

கீழே குறிப்பிடப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன. விபரம் கீழே காணப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 149 ஆம் பிரிவு | இலங்கை சுற்றுலா அபிவிருத்திச் சபையால் அங்கீகரிக்கப்பட்ட விடுதிகளிலிருந்து முன்னைய ஆண்டின் வருவாயில் ஒரு சதவீதத்திற்கு மேற்படாத தொகை அனுமதிப்பத்திரக் கட்டணமாக அறவிடப்பட வேண்டுமாயினும், 5 விடுதிகளிலிருந்து அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்பட வில்லை. |
| (ஆ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| (i) நி.பி 343 | வருவாய்ச் சேகரிப்பில் ஈடுபட்டுள்ள கள உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட அடியிதழ் சேர் புத்தகங்கள் பயன்படுத்தப்பட்டதன் பின்னர் அவற்றை ஒப்படைக்காது போனமை தொடர்பாக நிதிப் பிரமாணத்தின்படி நடவடிக்கை எடுக்கவில்லை. |
| (ii) நி.பி 371 | 1999 முதல் 2013 வரை 21 சந்தர்ப்பங்களில் பல்வேறு விடயங்களுக்கென சபையின் உத்தியோகத்தர்களுக்கும் பிறருக்கும் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 721,578 முற்பணம் தீர்த்து வைக்கப்படாதிருந்தது. |
| (iii) நி.பி 571 | வைப்பிலிடப்பட்டு 2 ஆண்டுகளைக் கடந்து விட்ட 497 சந்தர்ப்பங்களுடன் தொடர்புடைய சபையின் ரூபா 2,638,826 வைப்பானது வருவாயிலிடப்படாதிருந்தது. |
| (இ) இலங்கை குடியரசின் தாபன விதிக் கோவை அத்தியாயம் XXIV பிரிவு 4 | சபையில் பணியாற்றிய, மரணமடைந்த அல்லது சேவை நீங்கிய 6 ஊழியர்களிடமிருந்து |

அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடனாகிய ரூபா 40,503 அறவிடப்படவில்லை.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2013 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 10,564,207 ஆகும். இதற்கொப்பான, முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 7,855,566 ஆகும். இதற்கமைய, நிதிசார் விளைவுகளில் ரூபா 2,708,641 சாதக வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 2.2 பகுப்பாய்வுடனான நிதிசார் மீளாய்வு

நிதிசார் கூற்றுக்களின் தேறிய மிகை தொடர்பான பகுப்பாய்வுடனான மீளாய்வு கீழே காணப்படுகின்றது.

| **மீண்டுவரும் வருவாய்** | **2013** | **2012** | **வேறுபாடு** | |
|---|---|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | |
| தீர்வையும் வரியும் | 3,525,769 | 3,400,996 | 124,773 | |
| வாடகை | 7,902,655 | 8,684,265 | (781,610) | |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 2,332,024 | 1,999,702 | 332,322 | |
| சேவைக் கட்டணம் | 10,941,890 | 6,638,790 | 4,303,100 | |
| பிடி ஆணைக் கட்டணமும் தண்டப் பணமும் | 1,262,755 | 1,543,908 | (281,153) | |
| பிற வருவாய் | 5,934,703 | 2,713,536 | 3,221,167 | |
| வருவாய் உதவி | 19,653,945 | 20,532,256 | (878,311) | |
| | | | ---------------- | 6,040,288 |
| **மீண்டுவரும் செலவினம்** | | | | |
| சம்பளம் | 28,175,177 | 28,608,448 | 433,271 | |
| பயணச் செலவினம் | 521,029 | 798,057 | 277,028 | |
| வழங்கலும் உபகரணமும் | 3,159,128 | 2,737,750 | (421,378) | |
| மூலதனச் சொத்துப் பழுதுபார்ப்பும் பராமரிப்பும் | 1,153,707 | 628,153 | (525,554) | |
| போக்குவரத்தும் பயன்பாட்டுச் சேவைகளும் | 3,511,166 | 3,474,450 | (36,716) | |
| வட்டி செலுத்துதல், பங்கிலாபம், மிகையூதியம் என்பன | 3,355,703 | 581,205 | (2,774,498) | |
| உதவிப் பணம், உதவு தொகை நிவாரணத் தொகை | 39,678 | 33,260 | (6,418) | |
| சாதகமற்ற வேறுபாடு | 1,073,947 | 796,565 | (277,382) | |
| | | | ---------------- | (3,331,647) |
| | | | | ---------------- |
| | சாதகமான வேறுபாடு | | | 2,708,641 |
| | | | | ======= |

## 2.3 வருவாய் நிர்வாகம்

### 2.3.1 வருவாய்ச் சேகரிப்பின் செயலாற்றல்

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் வருவாய் நிலுவையை அறவிடுவதிலான முன்னேற்றம் நலிவான மட்டத்திலிருந்தது.

### 2.3.2 குத்தகை வாடகை

(அ) சபைக்குச் சொந்தமான 58 ஆம் இலக்க ஆட்டிறைச்சிக்கடை மற்றும் 59 ஆம் இலக்க மாட்டிறைச்சிக் கடை என்பவற்றின் வியாபாரஞ் செய்வதற்கான உரிமையை 2011 ஆம் ஆண்டு பெற்றுக்கொண்ட குத்தகையாளர்கள் கொடுப்பனவு செய்ய வேண்டிய வாடகை நிலுவையாகிய ரூபா 742,092 அறவிடப்படவில்லை.

(ஆ) புதிய வர்த்தகக் கூட்டுத் தொகுதியில் குத்தகைக்குக் கடைகளைப் பெற்றவர்கள் கடை வாடகையைச் செலுத்துவதைப் புறக்கணித்திருந்தனர். இதனால் 2013 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் வரை ரூபா 922,690 அறவிடப்படாதிருந்தது.

### 2.3.3 நீதிமன்றத் தண்டப் பணமும் முத்திரைக் கட்டணமும்

மாகாண சபையின் தலைமைச் செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணமும் முத்திரைக் கட்டணமும் பின்வருமாறு.

| | ரூபா |
|---|---|
| நீதிமன்றத் தண்டப் பணம் | 4,473,220 |
| முத்திரைக் கட்டணம் | 4,700,350 |
| | 9,173,570 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 கழிவகற்றல் செயற்திட்டம்

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) உள்ளூராட்சி உட்கட்டமைப்பு வசதிகளை முன்னேற்றுவதற்கான செயற்திட்டத்தின் கீழ் ரூபா 99,205,979 பெறுமதியுடைய கழிவகற்றல் செயற்திட்ட வேலை முடிவடைந்து 2013 ஜனவரி 14 அன்று பிரதேச சபையிடம் அது ஒப்படைக்கப்பட்டிருந்தது. எனினும், 2014 மே மாதமளவிலும் 10 பாவனையாளர்களுக்கே இணைப்புகள் வழங்கப்பட்டிருந்தன.

(ஆ) செயற்திட்டத்தை அமுலாக்கி இணைப்புகளை வழங்குகையில், குறித்த இடங்களில் குழாய்கள் பொருத்தப்படாமையால் செயற்திட்டத்தை இயக்குவதற்கு இயலாதிருந்ததுடன், சில பாவனையாளர்களிடமிருந்து பெறப்பட்ட பணமும் திருப்பிச் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) இச் செயற்திட்டத்துக்காக உள்ளூர்க் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திடமிருந்து பெற்ற தொகை ரூபா 34,142,123 ஆகும். குறித்த வட்டியைச் செலுத்தப் போதுமான வருவாயைச் செயற்திட்டத்தின் மூலம் ஈட்டுவதற்கு இயலாதிருந்தது.

**3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குரிய ''உடதெமோதர''காணியின் ஒரு பகுதியில் அத்துமீறிய நிர்மாண வேலை மேற்கொள்ளப்பட்டிருந்தது. திட்டமிடல் குழுவின் அங்கீகாரமின்றி குறித்த கட்டிடத்திற்கான விண்ணப்பம் தலைவரால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) வெலிமடை பிரதேச சபை தலைமை அலுவலக எல்லைக்குள் வரும் 30 ஆண்டுகால குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த 5 காணிகளுக்குரிய குத்தகை உடன்படிக்கையின் 1:3 ஆம் பிரிவின் பிரகாரம் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை விலை மதிப்புத் திணைக்களத்தால் விலை மதிப்பீடு செய்யப்பட்டு குத்தகைத் தொகை தீர்மானிக்கப்படாததுடன் குத்தகை வாடகை அறவிடப்படுவதும் புறக்கணிக்கப்பட்டிருந்தது. 2011 ஜுலை மற்றும் 2014 மே மாதமளவில் குத்தகை உடன்படிக்கைக் கால எல்லை முடிவடைந்திருந்த 5 சொத்துக்கள் சம்பந்தமாக குறித்த உடன்படிக்கையினது நிபந்தனைகள் மற்றும் சனாதிபதியின் செயலாளரது 2010 பெப்ரவரி 03 ஆந் திகதிய எஸ்பீ/ஆர்டீ/02/10 ஆம் இலக்கச் சற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) கெப்பிடிபொல உப அலுவலகத்தின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் கரகஸ்வாகுற மற்றும் கெடமில்ல காணிகள் தொடர்பாக அரசாங்க விலைமதிப்பு அறிக்கையைப் பெறாது சந்தை விலையிலும் குறைவாக பெயரளவு குத்தகையைச் சபை அறவீடு செய்ததன் காரணமாக, சபை பெறவேண்டிய பெருமளவு வருவாயை அது இழந்திருந்தது.

**3.3 செயற்பாட்டு வினைத்திறமையின்மை**

(அ) சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் தொலைத் தொடர்புக் கோபுரத்தை நடாத்திச் செல்வதற்கு உப விதிகளை அமைத்து கட்டணத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) 2006 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின்போது மீளளிப்புப் பெறவேண்டிய சம்பளமாகிய ரூபா 1,719,355 மற்றும் அங்கத்தவர் படியாகிய ரூபா 156.500 என்பன மீளளிப்புச் செய்யப்படவில்லை.

(இ) புதிய வர்த்தகக் கூட்டுத்தொகுதியில் 56 ஆம் இலக்க மீன் விற்பனைக் கடையில் கடற்றொழில் கூட்டுத்தாபனத்திடமிருந்து 2012 ஆம் ஆண்டிற்கென அறவிடப்பட வேண்டிய ரூபா 25,670 அறவிடப்படாது, நிலுவையாகவுள்ள மின்சாரக் கட்டணம் சபையின் நிதியிலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

**3.4 பயன்படுத்தப்படாத / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

கீழே காணப்படும் சொத்துக்கள் பயன்படுத்தப்படாதிருந்தன.

(அ) 1993 ஆம் ஆண்டில் ரூபா 138,650 க்குக் கொள்வனவு செய்யப்பட்ட 204-8982 ஆம் இலக்க முச்சக்கர வண்டி

(ஆ) கெப்பெடிபொல உப அலுவலக வளாகத்தில் இருந்த கீழே குறிப்பிடப்பட்ட சொத்துக்கள்

i. சன்டெக் வகை கை டிறக்டர் ஒன்று

ii. 270-0431 ஆம் இலக்க டிறக்டர்

iii. டிநெய்லர்

iv. நொடோ மால்டர் கை டிறக்டரும் கலப்பையும்

(இ) கெப்பெடிபொல உப அலுவலகத்தின் 20’X 12’ அளவிலான களஞ்சியக் கட்டிடம்

(ஈ) உட தொமோதர காணி

**3.5 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் திண்மக் கழிவப் பொருட்களைச் சேகரித்தல், அகற்றுதல், முகாமைத்துவமிடல் என்பன முறைப்படி நடைபெறாமையால் சுற்றாடல் பாதிப்புறும் நிலைமை உருவாகியிருந்தது.

**4. கணக்களி தகைமையும் நல்லாளுகையும்**

**4.1 இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

மீளாய்வாண்டிற்கெனச் சபை தயாரித்துச் சமர்ப்பித்த நிதிசார் கூற்றுக்கள் இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கமையத் தயாரிக்கப்பட வில்லை.

**4.2 வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்கெனத் தயாரிக்கப்பட்ட வரவு, செலவுத்திட்டத்தில் உள்ளவாறான வருவாயும் செலவினமும் வரவு, செலவுத் திட்டமிடப்பட்ட வருவாய், செலவினம் என்பவற்றுடன் ஒப்பிடப்படுகையில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டதனால் வரவு, செலவுத் திட்டம் ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்படாது இருந்தமை அவதானிக்கப்பட்டது.

| **மீண்டுவரும் வருவாய்** | **வரவு, செலவுத் திட்டமிடப்பட்டது 2013** | **உள்ளவாறானது 2012** | **வேறுபாடு** | **வேறுபாட்டினது சதவீதம்** |
|---|---|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | |
| தீர்வையும் வரியும் | 3,190,220 | 3,525,769 | 335,549 | 10.5 |
| வாடகை | 11,335,040 | 7,902,656 | 3,432,384 | 30.1 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 2,692,600 | 2,332,023 | 360,577 | 13.4 |
| சேவைக் கட்டணம் | 18,792,510 | 10,941,888 | 7,850,622 | 41.8 |
| பிடி ஆணைக் கட்டணமும் தண்டப் பணமும் | 1,971,000 | 1,262,756 | 708,244 | 35.9 |
| பிற வருவாய் | 3.025,220 | 5,934,700 | 2,909,480 | 96.2 |
| வருவாய்க்கான உதவி | 20,780,690 | 19,653,945 | 1,126,745 | 5.4 |
| **மீண்டுவருஞ் செலவினம்** | | | | |
| சம்பளமும் கூலியும் | 35,036,830 | 28,175,177 | 6,861,653 | 19.6 |
| பயணச் செலவினம் | 943,600 | 521,029 | 422,571 | 44.8 |
| வழங்கலும் உபகரணங்களும் | 4,318,100 | 3,159,128 | 1,158,972 | 26.8 |
| மூலதனச் சொத்துப் பழுதுபார்ப்பும் பராமரிப்பும் | 2,941,500 | 1,153,706 | 1,787,794 | 60.7 |

| | | | | |
|---|---|---|---|---|
| போக்குவரத்தும் பயன்பாட்டுச் சேவைகளும் | 3,855,650 | 3,511,165 | 344,485 | 8.9 |
| வட்டி செலுத்துதல், பங்கிலாபம், மிகையூதியம் என்பன | 511,000 | 3,355,702 | 2,844,702 | 556.6 |
| உதவிப் பணம், உதவு தொகை, நிவாரணத் தொகை | 114,000 | 39,678 | 74,322 | 65.2 |
| ஓய்வூதியம், ஓய்வூதிய நலன் மற்றும் பணிக்கொடை | 2,168,290 | 1,073,947 | 1,094,343 | 50.5 |

**5 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

-------------------------------------------------

கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருவாய் நிர்வாகம்

(இ) சொத்து முகாமைத்துவம்